## பாலியல் தொழிலில் ஈடுபடுத்திய கொடூரம் - செல்போனில் 8000 வீடியோக்கள் எடுத்து மிரட்டல்!

# சேலத்தில் 50 பெண்களை சீரழித்த த.வெ.க. பிரமுகர்!

## இளம்பெண் பேசும் ஆடியோவால் பகீர்!

**சேலம், ஜூன் 15-**

**சேலத்தில் 50 பெண்களை ஆபாச வீடியோ எடுத்து மிரட்டி த.வெ.க. பிரமுகர் பாலியல் தொல்லை கொடுத்து விபசாரத்தில் ஈடுபடுத்தியது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. அவர் மீது புகார் கூறி இளம்பெண் பேசும் ஆடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. அதில் செல்போனில் 8,000 வீடியோக்கள் இருந்ததாக அவர் கூறியது அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இதுதொடர்பாக த.வெ.க. பிரமுகரை போலீசார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.**

சேலத்தை அடுத்த நெய்காரப்பட்டி புத்தூர் அக்ரஹாரம் பகுதியைச் சேர்ந்த ஊர் பொதுமக்கள் சார்பில் கடந்த சில நாட்களுக்கு முன் சேலம் மாநகர போலீஸ் கமிஷனருக்கு ஒரு புகார் மனு கொடுக்கப்பட்டுள்ளது. அந்த மனுவில், `புத்தூர் அக்ரஹாரம் பகுதியில் மளிகைக்கடை நடத்தி வரும் மணிகண்டன் என்பவர், அரசால் தடை செய்யப்பட்ட குட்கா, பான்பராக், கூலிப் போன்ற புகையிலை பொருட்களை மக்களுக்கும், பள்ளி மாணவர்களுக்கும் போலீசுக்குத் தெரியாமல் விற்பனை செய்கிறார்.

இக்குற்றத்திற்காக ஏற்கனவே அம்மாபேட்டை, கொண்டலாம்பட்டி, அன்னதானப்பட்டி, செவ்வாய்பேட்டை, ஒசூர் போலீஸ் ஸ்டேஷன்களில் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. இத்தனை வழக்கு இருந்தும் தற்போதும் குட்கா உள்ளிட்ட போதை புகையிலைப் பொருட்களை தனியாக ஒரு தறிக்கூட வீட்டில் பேரலில் வைத்து விற்பனை செய்கிறார். இவர் இப்படி செய்வது போலீஸ் அதிகாரிகளுக்கும் நன்கு தெரியும். குறிப்பாக செவ்வாய்பேட்டை போலீஸ் இன்ஸ்பெக்டர், இவரிடம் பெரும் தொகையை பெற்றுக்கொண்டு மறைமுக உதவி செய்து வருகிறார்.

**பெண்களை இழிவு நிலைக்கு தள்ளும் த.வெ.க. பிரமுகர்!**

மேலும் ஒரு அதிர்ச்சி தரும் செய்தி என்னவென்றால், இந்த மணிகண்டன் பல பெண்களை மிரட்டியும், ஏமாற்றியும், பணத்தாசை காட்டியும் பாலியல் உறவு வைத்துள்ளார். அவர், அப்பெண்களுடன் பாலியல் உறவு வைத்துக் கொள்ளும்போது, தன்னுடைய செல்போனில் வீடியோ எடுத்து, அதை காட்டி மிரட்டி தொடர்ந்து உறவு வைத்துக் கொள்வதும், அப்பெண்களை பாலியல் தொழிலில் ஈடுபடுத்தி வருவதும் சில மாதங்களுக்கு முன்பு தான் தெரிய வந்தது.

அவ்வாறு அவர் பல பெண்களுடன் உடலுறவு வைத்து இருக்கும் வீடியோவை பென்டிரைவ் மூலம் பதிவு செய்து, சேலம் மாநகர ஆணையருக்கு புகார் மனுவில் இணைத்து அனுப்பியும் உள்ளோம். தன்னுடைய தொழிலை சட்டத்திற்கு முரணாக செயல்படுத்தி வருவதோடு, பல பெண்களின் வாழ்க்கையை நாசம் செய்தும் உள்ளார். இவரது மிரட்டலுக்கு அஞ்சி பல பெண்கள் அவர் சொல்வதை போல நடந்து வருகிறார்கள்.

அதனால், இவரை பிடித்து விசாரித்து செல்போனில் பிடித்து வைத்துள்ள ஆபாச படங்களை கண்டுபிடித்து, பெண்களை காக்குமாறு ஊர் பொதுமக்கள் சார்பாக கேட்டுக்கொள்கிறோம்," எனக்கூறப்பட்டுள்ளது.

இப்புகார் மனு வெளியாகி யிருந்த நிலையில் நேற்று, சமூக வலை தளங்களில் ஒரு இளம்பெண் பேசும் ஆடியோவும் வெளியானது. அதில், நெய்காரப்பட்டி மணிகண்டன், த.வெ.க பிரமுகராக இருப்பதாகவும், அவர் பல பெண்களை ஏமாற்றி, ஆபாச வீடியோ எடுத்து வைத்து மிரட்டுவதாகவும் கூறியுள்ளார்.

மேலும் அப்பெண், தான் கணவரை பிரிந்து வாழ்ந்து வருகிறேன். ஒரு பெண்ணிடம் வட்டிக்கு பணம் வாங்கிய நிலையில், அந்த நெருக்கடி காரணமாக கடந்த சில மாதங்களுக்கு முன் சேலம் பால்மார்க்கெட் பகுதியில் சாலையோரம் டூவீலரில் நின்றபடி அழுது கொண்டிருந்தேன். அப்போது, என்னை சுற்றிச்சுற்றி வந்த ஒருவர், அருகில் வந்து ஏன் அழுகிறீர்கள் என பேச்சுக்கொடுத்தார். நானும் ஆறுதலாக கேட்கிறார் என நடந்ததை கூறினேன்.

அப்போது, தனக்கு தெரிந்த பைனான்சியர்கள் இருக்கிறார்கள் என்றும், அவர்கள் மூலம் உதவுவதாகவும் தெரிவித்து, போன் நம்பரை வாங்கிக் கொண்டார். நான் வீட்டிற்கு சென்றதும், வீட்டிற்கு சென்று விட்டீர்களா என போன் செய்து பேசினார். பிறகு வாட்ஸ் அப் காலில் பலமுறை பேசினோம். என்னை ஓமலூர், மேட்டூர் பகுதிக்கு அழைத்துச் சென்று ஒன்றாக இருந்துள்ளார். போகும்போது ரூ.2 ஆயிரம், ரூ.5 ஆயிரம் தந்துள்ளார்.

**பெண்களை மிரட்டும் த.வெ.க.வினர்! மௌனம் காக்கும் போலீஸ்!**

ஓமலூரில் ஒரு அறையில் இருக்கும் போது, அவரது போனை வைத்து விட்டு, பாத்ரூம் சென்றார். அப்போது, அதை எடுத்து கேலரியை பார்த்தேன். அங்கு 8 ஆயிரம் வீடியோக்கள் இருந்தது. நான் அவருடன் வாட்ஸ்அப் காலில் பேசிய ஆபாச வீடியோக்களை பார்த்ததும், உடனே அவை அனைத்தையும் அழித்துவிட்டேன். 50க்கும் மேற்பட்ட பெண்களுடன் அவர், உறவில் இருப்பது, வீடியோ காலில் ஆபாசமாக இருக்கும் நிலையில் பேசுவது போன்ற வீடியோக்கள் இருந்தன. இதை பார்த்த பிறகு அவரிடம் இருந்து விலகிவிட்டேன்.

கடந்த சில மாதங்களாக தொடர்பில் இல்லாமல் இருந்தநிலையில், சமீபத்தில் என்னை தொடர்பு கொண்டு ஏன் பழையபடி இருக்க மாட்டியா என மிரட்டினார். மேலும், தன்னுடன் பழகியது போல், தனது நண்பர்களுடனும் பழக வேண்டும் எனக்கூறினார், இல்லையென்றால் வீடியோக்களை வெளியிட்டு விடுவேன் எனவும் மிரட்டினார். என்னை போல் பலரையும் அவர் மிரட்டி வருகிறார். அதனால் அவர் மீது காவல்துறையிலும், முதல்வர் தனிப்பிரிவிலும் புகார் அனுப்பினேன். இது வரை நடவடிக்கை இல்லை. அதனால் தற்போது கூறுகிறேன்.

தன்னுடன் பழகியது போல், தனது நண்பர்களுடனும் பழக வேண்டும் என த.வெ.க. பிரமுகர் கூறினார். இல்லையென்றால் வீடியோக்களை வெளியிட்டு விடுவேன் எனவும் மிரட்டினார். என்னை போல் பலரையும் அவர் மிரட்டி வருகிறார்.

# காவிரி டெல்டா விவசாயிகளை காப்பாற்றத் தவறியது த.வெ.க. அரசு!

## சு.கல்யாணசுந்தரம் எம்.பி. அறிக்கை!



தஞ்சை, ஜூன். 15–

மாநிலங்களவை கழக உறுப்பினர் சு.கல்யாணசுந்தரம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–

காவிரி டெல்டா பகுதி தமிழ்நாட்டின் உணவுப் பாதுகாப்பிற்கும், இலட்சக்கணக்கான விவசாயிகளின் வாழ்வாதாரத்திற்கும் அடித்தளமாக விளங்கி வருகிறது. ஆண்டுதோறும் ஜூன் 12ஆம் தேதி மேட்டூர் அணை திறக்கப்படுவது டெல்டா விவசாயிகளின் நம்பிக்கையின் தொடக்கமாக கருதப்படுகிறது.

ஆனால் இந்த ஆண்டு ஜூன் 12 கடந்தும், மேட்டூர் அணையில் போதுமான நீர் இருப்பு இல்லாத காரணத்தால் குறுவை சாகுபடி குறித்து டெல்டா விவசாயிகள் மிகுந்த கவலையில் உள்ளனர். இந்த நிலைமை உருவாகும் என்பதை முன்கூட்டியே கணித்து, தமிழக அரசு என்ன நடவடிக்கைகள் மேற்கொண்டது என்பது குறித்து விவசாயிகள் மத்தியில் பல்வேறு கேள்விகள் எழுந்துள்ளன.

**மேட்டூர் அணை திறப்பு வரலாற்று சாதனை!**

2021 முதல் 2026 வரை நடைபெற்ற ஆட்சிக் காலத்தில், அப்போதைய முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் காவிரி பிரச்சினையை விவசாயிகளின் வாழ்வாதாரப் பிரச்சினையாக அணுகி பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டார். 2021 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் வழக்கம்போல் ஜூன் 12 அன்று மேட்டூர் அணை திறக்கப்பட்டது. 2022 ஆம் ஆண்டு மே 24ஆம் தேதியே அணை திறக்கப்பட்டு வரலாற்றுச் சாதனை படைக்கப்பட்டது.

2022 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட திட்டமிடலின் காரணமாக 47 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு குறுவை சாகுபடி பரப்பளவு விரிவடைந்தது. அதேபோல் 2025 ஆம் ஆண்டு மேட்டூர் அணை திறக்கப்பட்டபோது 114 அடிக்கும் மேற்பட்ட நீர் இருப்பு காணப்பட்டதுடன், 6.31 லட்சம் ஏக்கர் பரப்பளவில் குறுவை சாகுபடி நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

2024 ஆம் ஆண்டு நீர்வரத்து குறைவால் மேட்டூர் அணை திறப்பில் தாமதம் ஏற்பட்டபோதும், அப்போதைய அரசு விவசாயிகளை கைவிடாமல் மாற்றுப் பயிர் ஆலோசனைகள், சிறப்பு நிவாரண நடவடிக்கைகள் மற்றும் தொடர் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டது. நெருக்கடியை காரணம் காட்டாமல், அதற்கான தீர்வுகளை தேட முயன்றது.

தற்போதைய சூழலில் தமிழக அரசு கர்நாடக அரசுடன் எத்தனை முறை உயர்மட்ட பேச்சுவார்த்தை நடத்தியது? காவிரி மேலாண்மை ஆணையத்தின் முன் தமிழகத்தின் உரிமையை வலியுறுத்த என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன? தேவைப்பட்டால் நீதி மன்றத்தை அணுகும் சட்ட நடவடிக்கைகள் பரிசீலிக்கப்பட்டனவா? குறுவை சாகுபடியை பாதுகாக்க டெல்டா விவசாயிகளுக்கான அவசர செயல் திட்டம் என்ன? என்ற கேள்விகளுக்கு அரசு தெளிவான பதில் அளிக்க வேண்டும்.

குறிப்பாக, தற்போதைய வேளாண்மைத் துறை அமைச்சர் டெல்டா மண்ணைச் சேர்ந்தவர் என்பதால், காவிரி நீரின் அவசியத்தையும், டெல்டா விவசாயிகளின் எதிர்பார்ப்புகளையும் நன்கு உணர்ந்திருப்பார் என்று மக்கள் நம்புகின்றனர். கடந்த காலங்களில் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்ட அனுபவங்களில் இருந்து கற்றுக் கொண்டு, இன்னும் தீவிரமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய பொறுப்பு அவருக்கு உள்ளது.

காவிரி உரிமை என்பது தமிழ்நாட்டின் உயிர் உரிமை. டெல்டா விவசாயிகளின் நலனையும், குறுவை சாகுபடியையும் பாதுகாக்க தமிழக அரசு உடனடியாக அரசியல், நிர்வாக மற்றும் சட்ட ரீதியான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

டெல்டா விவசாயிகளின் எதிர்பார்ப்பு வெறும் அறிக்கைகள் அல்ல; உரிமையை பெற்றுத்தரும் உறுதியான செயல்பாடுகள்தான். கடந்த கால அனுபவங்கள் இன்று வழிகாட்டியாக மாற வேண்டிய தருணம் இது.

நீர் இல்லாதது இயற்கையின் கையில் இருக்கலாம். ஆனால் அந்த நெருக்கடியை எதிர்கொள்ளும் முன் தயாரிப்பும், உரிமையை நிலைநாட்டும் அரசியல் உறுதியும், விவசாயிகளை பாதுகாக்கும் நிர்வாகத் திறனும் அரசின் கையில் தான் உள்ளன. அதுவே ஒரு ஆட்சியின் உண்மையான திறமையை அளவிடும் அளவுகோல்.

காவிரி உரிமை என்பது தமிழகத்தின் உயிர் உரிமை. டெல்டா விவசாயிகளின் எதிர்காலம் பாதுகாக்கப்பட வேண்டுமெனில், உடனடியாக அனைத்து அரசியல், நிர்வாக மற்றும் சட்ட வாய்ப்புகளையும் பயன்படுத்தி காவிரி நீரை பெற்றுத் தர தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**காலம் தாழ்த்தாமல் நடவடிக்கை தேவை!**

ஜூன் 12 கடந்தும் விவசாயிகளுக்கு உறுதியான நம்பிக்கையை அளிக்கத் தவறியிருப்பது கவலையளிக்கிறது. இனியும் கால தாமதம் செய்யாமல் செயல்பட வேண்டிய கட்டாயத்தில் அரசு உள்ளது.

இல்லையெனில் குறுவை சாகுபடி பாதிப்பு, விவசாயிகளின் பொருளாதார இழப்பு மற்றும் டெல்டா பகுதியின் வேளாண் நெருக்கடிக்கு இந்த அரசே முழுப் பொறுப்பேற்க வேண்டிய நிலை உருவாகும்.

டெல்டா விவசாயிகளின் நம்பிக்கையை காப்பாற்றவும், தமிழ்நாட்டின் உரிமையை நிலைநாட்டவும் தமிழக அரசு அவசர நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



புதுக்கோடடை டவுன் ரோட்டரி சங்க முன்னாள் தலைவர் வழக்கறிஞர் எங்.தனஞ்ஜெய ராமச்சந்திரன் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு நாளில் அவரது திருவுருப்படத்திற்கு மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் மலரஞ்சலி செலுத்தினார். உடன் முன்னாள் அரசு வழக்கறிஞர் பூங்குடி சிவா மற்றும் பலர் உள்ளனர்.

## த.வெ.க. ஆட்சியில் சென்னையை தொடர்ந்து

# கோவை மாநகரிலும் பல்வேறு இடங்களில் மின்வெட்டு!

## பொதுமக்கள் கடும் அவதி!

சென்னை, ஜூன். 15-

த.வெ.க. ஆட்சியில் சென்னையை தொடர்ந்து கோவை மாநகரில் பல்வேறு இடங்களில் இரவு நேரத்தில் மின்வெட்டு ஏற்பட்டு வருவதால் பொது மக்கள் கடும் அவதியடைந்துள்ள னர்.

சினிமா மோகத்தின் காரணமாக தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு நடிகர் விஜய் தலைமையிலான தவெக அரசு பொறுப்பேற்றது முதல் கோவை மாநகரத்தில் பல்வேறு பகுதிகளில் அறிவிக்கப்படாத மின்வெட்டு ஏற்பட்டு வருகிறது. குறிப்பாக, சென்னையில் பல மணி நேரம் நள்ளிரவில் நீடிக்கும் மின்வெட்டால் வீதிகளில் இறங்கி பொது மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

சென்னை மட்டுமின்றி பல்வேறு மாவட்டங்களிலும் தற்போது இரவு நேரங்களில் மின் வெட்டு பிரச்னை ஏற்பட்டுள்ளது. அதன்படி, கோவை மாவட்டத்திலும் கடந்த சில நாட்களாக பகல் மற்றும் இரவு நேரங்களில் அறிவிக்கப்படாத மின்வெட்டு ஏற்பட்டு வருகிறது. இரவு நேரங்களில் 45 நிமிடங்கள் வரையும், பகல் நேரத்தில் 30 நிமிடங்கள் வரையும் மின்வெட்டு ஏற்படுகிறது. இது தவிர அடிக்கடி 10 நிமிடங்கள் பல்வேறு இடங்களில் மின்வெட்டு நடக்கிறது. மழை, காற்று போன்ற காரணங்களினால் மின்வெட்டு ஏற்படுவதாக மின்வாரியத்தினர் கூறுகின்றனர். இரவு நேரங்களில் ஏற்படும் மின்வெட்டு காரணமாக ஏழை, நடுத்தர மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டு வருகின்றனர். குறிப்பாக, கவுண்டம் பாளையம், கணபதி, மணியகாரன்பாளையம், ரத்தினபுரி, வடவள்ளி உள்ளிட்ட பகுதிகளில் மின்வெட்டு பிரச்னை அதிகரித்து இருக்கிறது. மின்வெட்டு தொடர்பான புகார்களும் மின்வாரியத்திற்கு அதிகரித்துள்ளது. சென்னையில் பல மணி நேரம் மின்வெட்டு பிரச்னை நீடித்து வரும் நிலையில், கோவையிலும் தற்போது அறிவிக்கப்படாத மின்வெட்டு ஏற்பட்டு வருவதால், பொதுமக்கள் அச்சமடைந்துள்ளனர். மின்வெட்டு பிரச்னைக்கு உடனடி தீர்வு காண வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

## முத்துப்பேட்டை ஒன்றியச் செயலாளர்

# இரா.மனோகரன் தாயார் சரோஜா அம்மையார் மறைவு!



திருவாரூர்,ஜூன்15.

திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டை ஒன்றிய செயலாளர் இரா. மனோகரனின் தாயார் சரோஜா அம்மையார் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

மறைந்த சரோஜா அம்மையாருக்கு மனோகரன், கண்ணன் என்கிற மகன்கள் உள்ளனர். இதில் மனோகரன் முத்துப்பேட்டை ஒன்றிய கழகத்தின் செயலாளராக இருந்து கழகப் பணியாற்றி வருகிறார். அம்மையாரின் மறைவின் தகவல் அறிந்த மாவட்டக் கழக செயலாளர் பூண்டி.கே.கலைவாணன், தாயை இழந்து வாடும் மனோகரனுக்கு ஆறுதலை தெரிவித்தார்.

அம்மையாரின் இறுதி ஊர்வலம் நேற்று (ஞாயிற்று கிழமை) மாலை 4.00 மணிக்கு முத்துப்பேட்டை ஒன்றியம் இடும்பாவனம் கீழவாடிக்காடு இல்லத்தில் இருந்து புறப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட்டது. திருவாரூர் மாவட்ட, மாநில, மாவட்ட ஒன்றிய,நகர, பேரூர் மற்றும் வார்டு கழக நிர்வாகிகள் கழக தோழர்கள் மறைந்த சரோஜா அம்மையாரின் உடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.




சேலம் மாநகராட்சி தூய்மை இந்தியா இயக்கம் (நகர்ப்புறம்) 2.0 திடக்கழிவு மேலாண்மை 2026 குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக நுண்உயிரி உர மையத்தில் உற்பத்தி செய்யப்பட்ட உரத்தினை மேயர் ஆ.இராமச்சந்திரன், மாநகராட்சி மைய அலுவலகத்தில் பொதுமக்களுக்கு வழங்கினார். உடன் ஆணையாளர் லலித் ஆதித்ய நீலம், துணை மேயர் திருமதி. மா.சாரதாதேவி, மாநகர நல அலுவலர் மரு.செ.ராம்குமார் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் வெ. தெய்வலிங்கம், மா.திருஞானம், ஆகியோர் உள்ளனர்.